# ஹங்குரன்கெத்த பிரதேச சபை
# நுவரஎலிய மாவட்டம்

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 28 திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வண்டின் போது ரூபா 1,516,794 இற்கான சந்கை வாடகை பில் போடப்பட்டுள்ளவை வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 1,129,023 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 387,771 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 அக்டோபர் மாதம் சேவையை நிரந்தரப்படுத்தியிருந்த 18 ஊழியர்களுக்கு ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 914,954 இற்கான சம்பளத்தை, மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கடன்பட்டோர் எனவும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) பௌதீக திட்டமிடல் பகுதியில் சம்பள மீளளிப்புக்கள் ரூபா 9,388,789 இனை வருமானச் செலவுக் கணக்குகளில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் ஏனைய வருமானம் மிகையாகவும் மற்றும் சம்பள மீளளிப்பு(ஏனைய உதவிகள்) குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சேவைகளுக்கான கட்டடணமாக ரூபா 500,761 இற்கான தொகையொன்று வருமானச் செலவுக் கணக்கில் அனுமதிப்பத்திரத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் அனுமதிப்பத்திர கட்டண வருமானம் மிகையாகவும் மற்றும் சேவைக் கட்டண வருமானம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 14,464,226 இற்கான உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி கடன் நிதியத்தின் மீதியை நிதிக் கூற்றுக்களில் ரூபா 14,444,329 தொகை என காட்டப்படிருந்தமையால் கடன் மூலதனம் ரூபா 19,897 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ள காசேட்டின் பதிவு செய்யப்படாத பெறுவனவுகள் ரூபா 291,285 இனை காசேட்டில் பதிவு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,037,147 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள் அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,037,531 ஆகும்.

1.3.3 தேறிய சொத்துக்களில் குறைவு ஏற்படல்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 103,096,026 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது அப் பெறுமதி ரூபா 104,064,928 தொகை என அவதானிக்கப்பட்டிருந்தது.

1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 39,194,775 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருட காலத்தை விஞ்சியுள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 14,112,067 ஆகும். இப் பணம் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய ஏற்பாடுகள் ஆக காணப்பட்டதுடன் அவை கிடைப்பதென்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 40,051,191 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 9,340,611 ஆக காணப்பட்டது.

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,580,613 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,390,754 ஆக காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 1,810,141 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. அதற்காக 2014 ஆண்டின் போது 03 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 28 வரையான வீச்சில் குறைதலும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 24 முதல் நூற்றிற்கு 1080 வரையான வீச்சில் அதிகரிப்பும் காரணமாகியுள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை சொத்துக்களை பரிசோதனை மேற்கொண்ட போது, நடைமுறை விகிதாசாரம் 1:2:1 ஆகக் காணப்பட்டதுடன் அது உச்ச மட்டத்தை விட குறைவாகக் காணப்பட்டது. அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது அப் பெறுமதி 2:3:1 இற்கான உச்ச மட்டத்தில் காணப்பட்டது நடைமுறைச் சொத்துக்களில் நூற்றிற்கு 74 உம் நிர்மான வேலை உதவி நிலுவைகளாகக் காணப்பட்டதுடன் நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 74 உம் நிர்மாண வேலை கடன் கொடுத்தோராக காணப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014 ஆண்டின் போது பில் போடப்பட்டவை | ஆண்டின் பெறுவனவுகள் | | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆண்டின் நிலுவை அறவிடப்பட்டவை | 2014 ஆண்டின் பில் போடப் பட்டவைகளில் | நிலுவையில் | பில் போடப் பட்டவைகளில் | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,812,947 | 1,888,916 | 494,764 | 954,277 | 1,318,183 | 934,639 | 2,235,517 |
| கடை வாடகை | 1,019,919 | 1,073,465 | 85,022 | 543,921 | 934,897 | 529,544 | 1,464,441 |
| நீர்க் கட்டணம் | 755,679 | 1,181,090 | 590,620 | 630,450 | 165,059 | 550,640 | 715,699 |
| முத்திரை கட்டணம் | 3,758,386 | 4,149,120 | 2,150,155 | 1,291,703 | -- | 2,857,417 | 2,857,417 |
| நீதிமன்ற தண்டம் | 480,710 | 974,202 | 472,706 | 374,622 | 9,004 | 599,580 | 607,581 |

2.4.2 வீதவரி

----------

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் நூற்றிற்கு 27 உம் மற்றும் ஆண்டின் போது பில் போடப்பட்டவைகளில் நூற்றிற்கு 50 உம் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆரம்ப மீதியில் இருந்து ரூபா 1,237,211 தொகை உட்பட மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,235,517 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4.3 வாடகை

-------------

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,464,441 இற்கான வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் வாடகையாளர்கள் சபையுடன் முறையான உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

2.4.4 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாடகை கார்களை நிறுத்தி வைப்பதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. பல்வேறு வாடகை வாகனங்களுக்காக வாகன தரிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு அதற்கு இடங்கள் அடையாளமிடப்பட்டு முறையாக, வாடகை ஒன்றினை அறவீடு செய்வதற்கு இயலுமாக இருக்கும் போது அதிகாரிகளின் திறமையின்மை காரணமாக அவ் வருமானத்தை இழந்துள்ளது. இந்த வாடகை வாகனங்கள் தொடர்பாக 2014 ஆண்டின் போது ரூபா 9,600 தொகையான வருமானம் ஒன்று மாத்திரமே கிடைத்திருந்தது.

2.4.5 நீர்க் கட்டணம்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 715,699 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருடத்தை விட பழமை வாய்ந்த நிலுவைத் தொகை ரூபா 165,059 ஆகும். நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக முறையான முறைமை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.6 வர்த்தக அனுமதிப்பத்திரம்

---

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 07 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் வருமானப் பரிசோதகர் அல்லது தலைவரினால் முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதன் மூலம் அனைத்து வர்த்தகர்களின் பெயர்களை அனுமதிப்பத்திர பதிவேட்டில் உட்படுத்தி அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் அந்த அறிவுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4.7 நீதிமன்ற தண்டப்பண மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 974,202 |
| முத்திரைக் கட்டணம் | 4,149,120 |
| | 5,123,322 |

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---

(அ) 2008 திசெம்பர் 31 திகதி வங்கி இணக்கக் கூற்றில் காணப்படும் ரூபா 25,574 இற்கான இனங்காணப்படாத வித்தியாசம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 218 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக வருடாந்த பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையின் குப்பை முகாமைத்துவத்திற்காக பல வருட காலம் முதல் பொருத்தமான முறைமை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை. 2014 ஜனவரி முதல் அக்டோபர் வரை குப்பைகளுக்கு மண் போடப்பட்டு மூடுவதற்காக ரூபா 276,440 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.3 சுற்றாடல் சிக்கல்கள்

---------------------------------

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---------------------------------------------------------

4.1 கூட்டிணைந்த திட்டம்

----------------------------------

சபையினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 766 வரையும், 10 செலவு விடயங்களில் நூற்றிற்கு 09 முதல் நூற்றிற்கு 766 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீட்டு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையான நிதி ஏற்பாடுகளின் தேவை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் 09 செலவு தலைப்புக்களுக்கு மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்துடன் ஆண்டின் போது குறை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 15 செலவு விடயங்களுக்கு இவ் ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன.

(இ) 07 செலவு தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 960,000 இற்கான தொகை ஒன்று குறிப்பிட்ட கருமத்திற்கு பயன்படுத்தப்படாமல் முழுத் தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பாதிட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத 05 சந்தர்ப்பங்களில் ரூபா 356,062 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது.

4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

--------------------------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 46,723,606 இற்கான மூலதன செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் உப பந்தி 4:2 இன் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டமொன்றினை பயன்படுத்தியிருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

------------------------------

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜுன் 09 திகதிய டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிருவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு